# இளைஞர்களிடையே “டிக்டொக்” செயலியின் பயன்பாடு: முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகப்பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**கல்கி, ஜெ., பூங்குழலி, சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kalkyj09@gmail.com

*ஒரு கருத்தை அல்லது தகவலை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு பரிமாற்றம் செய்ய உதவும் கருவியே ஊடகமாகக் கருதமுடிகின்றது. சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இளைஞர்கள் முன்னணியில் உள்ளனர். குறிப்பாக 15-30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இன்று சமூக ஊடகங்களையே பயன்படுத்தி வருவதாக பெரும்பாலானவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான சூழலில், இளைஞர்களுக்கும் சமூக ஊடகப் பாவனைக்குமிடையில் கணிசமானதொரு தொடர்பு காணப்படுகின்றது. சமூக ஊடகப் பாவனையில் “டிக்டொக்“ செயலியை இளைஞர்கள் பயன் படுத்துவதால் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுவது இனங்காணப்பட்டதன் அடிப்படையில் இளைஞர்கள் “டிக்டொக்” செயலியை பயன்படுத்துவதால் எவ்வாறான தாக்கங்கள் ஏற்படு கின்றது என்பதனைக் கண்டறிவதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகக் கொள்ளப் பட்டது. அதனடிப்படையில், முல்லைத்தீவு கரைதுறைப்பற்றில் உள்ள இளைஞர்களை ஒன்றிணைக்கக் கூடிய பகுதியாக விளையாட்டுக்கழகங்கள் காணப்பட்டமையினால் அவற்றில் செயற்பாட்டில் உள்ள பத்து விளையாட்டுக்கழகங்களிலுள்ள இளைஞர்கள் (333) தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்ஆய்வுக்காக அளவியல் மற்றும் பண்புசார் முறையில் தரவுகள் பெறப்பட்டன. விளையாட்டுக்கழகங்களில் உள்ள மாதிரிகள் ஒவ்வொரு துறைசார்ந்து டிக்டொக் செயலியில் காணொளிகளைப் பதிவிடுகின்றமையினால் முதலாம் நிலைப் பண்புத்தரவாக குவிமையக்கலந்துரையாடல்கள் மூலமும் அளவியல் தரவுகளாக வினாக்கொத்து (80) மூலமும் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக டிக்டொக் செயலி பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம் போன்றவற்றின் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. முல்லைத்தீவு கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு இளைஞர்களிடையே காணப்படுகின்ற சமூக ஊடகப் பாவனையில் டிக்டொக் செயலியின் பயன்பாட்டினால் எவ்வகையான தாக்கங்கள் ஏற்படுகின்றன, இளைஞர்கள் டிக்டொக் செயலியைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள், ஏனைய சமூக ஊடகங்களோடு ஒப்பிடும் போது டிக்டொக் செயலியின் பயன்பாட்டு நேரம் எவ்வகையானது, இளைஞர்களிடையே டிக்டொக் செயலி எவ்வாறான சமூகத் தொடர்பாடலை ஏற்படுத்துகிறது போன்றவற்றினைக் கண்டறிதல் இவ் ஆய்வின் துணை நோக்கங்களாக ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டன. தரவுகளானது கணினி மூலம் எளிய புள்ளி விவரவியல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. முல்லைத்தீவு கரைதுறைப்பற்று இளைஞர்கள் டிக்டொக் செயலியைப் பயன்படுத்துவதற்கான காரணங்களாக விளம்பரப் படுத்தல், பிரபலமடைதல், வேலைப்பளு தொடர்பான மன அழுத்தத்திலிருந்து விடுபடுதல், வணிகம், பொழுதுபோக்கு, கல்வித் தேவை போன்றன அடையாளம் காணப்பட்டன. இந்த*